செய்தி வெளியீடு எண்: 63 நாள்: 20.01.2011

## மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு

### ‘‘உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்’’ கீழ் திருக்கோயில் பணியாளர்களை சேர்த்தல்

========

2010–2011ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது தமிழக சட்டப் பேரவையில் 12.05.2010 அன்று **‘‘உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்’’, திருக்கோயில்களில் ரூபாய் 72 ஆயிரம் மற்றும் அதற்குக் குறைவாக ஆண்டு வருமானம் பெறும் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கும் இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும். காப்பீட்டிற்கான சந்தா தொகையினை அறநிலையத் துறை ஏற்கும். இத்திட்டத்தில், வருமான அடிப்படையில் பயனடைய இயலாத திருக்கோயில் பணியாளர்களுக்கு இதர காப்பீட்டுத் திட்டங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம் ஒரு இலட்சம் பணியாளர்கள் பயனடைவார்கள்**’’ எனத் தமிழக அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டது.

2. அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில் திருக்கோயில் பணியாளர்கள் / ஓய்வூதியதாரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் அனைவரையும் “உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ்” சேர்த்திட இந்து சமய அறநிலையத் துறை ஆணையருக்கு அனுமதி வழங்கியும், சந்தா தொகையினை அரசே ஏற்கும் எனவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆணையின் காரணமாக 26 ஆயிரத்து 404 திருக்கோயில் பணியாளர்களும் மற்றும் அவர்களது குடும்பத்தினருமாக ஏறத்தாழ ஒரு லட்சத்து 32 ஆயிரம் பேர் பயன் பெறுவார்கள் என மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பெரிய கருப்பன் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.**